# அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையா

கி. முத்துராம–ங்கம்

(இடம் தமிழாசிரியர் கதிர்வே–ன் வீடு. பங்கேற்போர்: தமிழாசிரியர் கதிர்வேல், மனைவி அமுதினி, பதினொன்றாம் வகுப்பு படிக்கும் அவர் மகன் சுப்பையா, கதிர்வே–ன் நண்பரும் சுப்பையாவின் தமிழாசிரியருமாகிய சூசை அமல்ராசு; ஞாயிறு காலை நேரம்)

(சுப்பையா கணக்குப் புத்தகத்தில் உள்ள கணக்குகளை வீட்டுப்பாடமாகச் செய்து கொண்டிருக்கின்றான்.)

**கதிர்வேல்:** என்னடா! ஆச்சரியமா இருக்கு! ஞாயிற்றுக்கிழமை எல்லாம் படிக்கிறியே!

**சுப்பையா:** இதுல ஆச்சரியத்துக்கு என்ன இருக்கு! வீட்டுப்பாடம் செய்ய வேண்டியது மீதி இருந்தது! அதைத்தான் செய்துக்கிட்டு இருக்கேன்.

**கதிர்வேல்:** என் மகன் வீட்டுப்பாடம் செய்றான் – அதுவும் ஞாயிறு காலைல எழுந்து உட்கார்ந்து செய்றான் னா – இதை நம்ப முடியலயே! சரி! சரி! இந்த நாட்டில நடக்கிற எதைத் தான் நம்ப முடியுது! சரி! படி! படி! இன்னைக்காவது திருந்தணும் னு மனசு வந்துச்சே! பத்தாவது மட்டும் நல்லா படிச்சா போதாது! அது அடிப்படை அவ்வளவு தான்!

(அருகில் இருக்கும் திருக்குறள் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கதிர்வேல் சாய்வு நாற்கா–யில் உட்கார்கிறார்)

(அரை மணி நேரத்திற்குப் பிறகு)

**சுப்பையா:** அப்பா!

**கதிர்வேல்:** (நிமிர்ந்து பார்க்காமலேயே) என்னடா?

**சுப்பையா:** இந்தாங்க!

**கதிர்வேல்:** அடடே! மதிப்பெண் அட்டையா?

(சுப்பையா அமைதியாக நிற்கிறான்)

**கதிர்வேல்:** அதான பார்த்தேன்! என்னடா நம்ம மகன் ஞாயிற்றுக்கிழமை காலைல படிக்கிறானேன்னு! (மதிப்பெண்களைப் பார்த்துக்கொண்டே) என்னடா இது? தமிழ் ல போய் எழுபத்தாறு மதிப்பெண் தான் எடுத்திருக்கே! நீ என் பேர கெடுத்துடுவ போல இருக்கே!

**சுப்பையா:** இல்லப்பா! அது வந்து...

**கதிர்வேல்:** இந்த வந்து, போய் னு எங்கிட்ட கதை சொல்–மாட்டிக்கிடாதே! போன வருசம் பத்தாவதுல பள்ளிக்கூடத்துல முதல் மதிப்பெண் வாங்குன பையன் இந்த வருசம் அதுவும் தமிழ்ல எழுபத்தாறு தான் வாங்கிருக்கான் னா திமிரு கூடிப் போச்சுன்னு தான் அர்த்தம்!

(சுப்பையா அமைதியாக நிற்கிறான்)

**கதிர்வேல்:** (மதிப்பெண் அட்டையை வெறித்துப் பார்த்துக்கொண்டே) மொத்தத்துல, எழுபத்தெட்டு விழுக்காடு தான் வாங்கியிருக்கே! இப்படிப் படிச்சா படிப்பு சிரியா சிரிச்சிரும் தம்பி! மத்தவங்கள மாதிரி, இலட்சம் இலட்சமா காசு கொடுத்து உன்னைக் கல்லூரியில சேர்த்து விடுவேன்னு நம்பிக்கிட்டிருக்காதே! நீ எடுக்கிற மதிப்பெண்ணுக்கு எந்த அரசுக்கல்லூரியில் இடம் கிடைக்குதோ அங்க தான் சேர்த்து விடுவேன்!

(சுப்பையாவின் அமைதி தொடர்கிறது)

**கதிர்வேல்:** என்ன? நான் பேசிக்கிட்டே இருக்கேன்... நீ அமைதியா நின்னுக்கிட்டே இருக்கே! நான் சொல்றது விளங்குதா?

(சுப்பையா தலை குனிந்து நின்று கொண்டே "புரிகிறது" எனத் தலையசைக்கிறான்)

**கதிர்வேல்:** சரி! சரி! அப்பா திட்டுறாருன்னு நினைச்சுக்கிடாதே! படிப்புங்கிறது வாழ்க்கையில ரொம்ப முக்கியம்! இன்னைக்கு நாலு எழுத்து படிச்சிருக்கிறதால தான் நம்ம குடும்பத்த நாலு பேர் மதிக்கிறாங்க! நானும்

உங்க சித்தப்பாவும் எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்ந்தோம்கிறது உனக்குத் தெரியும்னு நினைக்கிறேன்! அதை எல்லாம் மனசுல வச்சுப் படி! நீ அந்த அளவு எல்லாம் கஷ்டப்படலே! உனக்கு வேண்டியத எல்லாம் நான் வாங்கித் தந்திருக்கேன்! வேளாவேளைக்கு உங்கம்மா உன்னை நல்லா கவனிக்கிறா!

(கதிர்வே—ன் மனைவி அமுதினி, கையில் பால் குவளைகளுடன் நுழைகிறாள்)

**அமுதினி:** என்ன காலைல உங்க சத்தம் பலமா இருக்கு! இந்தாங்க! இரண்டு பேரும் பால் எடுத்துக்கோங்க!

**கதிர்வேல்:** உன் பையன் மதிப்பெண்களைப் பார்த்தியா?

**அமுதினி**: நேற்று சாயங்காலமே பார்த்தேனே! கொஞ்சம் மதிப்பெண் குறைய எடுத்திருக்கான்!

**கதிர்வேல்:** கொஞ்சம் குறைய எடுத்துருக்கானா? கொஞ்சம் தான் எடுத்துருக்கானா?

**அமுதினி:** விடுங்க! இது முதல் மாச மதிப்பெண் தானே! இப்பத் தான் அவனுக்கு வகுப்பு எல்லாம் கொஞ்சம் புரிய ஆரம்பிச்சிருக்கும்! அதுக்குள்ள அவன போட்டு இப்படிப்பாடாப் படுத்துருங்களே!

(கதிர்வேலும் சுப்பையாவும் பாலை அருந்தத் தொடங்குகிறார்கள்)

**கதிர்வேல்:** அதில்லடி! சும்மாவா சொன்னாங்க – "வாத்தியார் பையன் மக்கு, காவல்காரன் மகன் களவாணி"ன்னு! அதுல நம்ம வீட்டுலயே ப—ச்சிடக் கூடாது பாரு! அதுக்குத்தான்!

(அம்மாவின் ஆதரவு கிடைத்தவுடன் சற்று புத்துணர்ச்சியடைந்த சுப்பையா)

**சுப்பையா:** அமாம்பா! விளக்கடி இருட்டுன்னு கூடச் சொல்வாங்க!

**கதிர்வேல்:** பாத்தியா! உம் பிள்ளைய எப்படிக் கெடுத்து வச்சிருக்க பாரு! லேசா நீ அவன ஆதரிச்சுப் பேசின உடனே என்ன பேச்சு பேசறான் பாரு!

**அமுதினி:** என்ன இப்ப தப்பாச் சொல்—ட்டான்! நீங்க சொன்ன பழமொழிக்கு இணையா இன்னொரு பழமொழி சென்னான் அவ்வளவுதான்! நீங்க ஒரு தமிழாசிரியரா இதை நினைச்சுப் பெருமை தான் படணும்! அதை விட்டுட்டு...

(கேட்டுக்கொண்டே அமுதினி தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சப் போகிறாள்)

(கதிர்வேல் மீண்டும் தம் அறிவுரையைத் தொடர்கிறார். இம்முறை சுப்பையா பதில் சொல்லத் தொடங்குகிறான்)

**கதிர்வேல்:** கொஞ்சம் பொறுப்பாப் படிடா! முன்ன போல எல்லாம் கிடையாது! இப்ப எல்லாரும் படிக்கிறாங்க! அதனால போட்டி கூடியிருக்கு!

**சுப்பையா:** இல்லப்பா! இது முதல் தடவ! அதனால கொஞ்சம் கவனக்குறைவா இருந்துட்டேன்! இனிக் கவனமா இருக்கேன்.

**கதிர்வேல்:** முதல் தடவன்னு சொல்றது சரி! ஆனா அதுவே முதல் கோணல் முற்றிலும் கோணல் னு ஆகிடக் கூடாது!

(சுப்பையா பால் குவளைகளைக் கொண்டு அடுக்களையில் வைத்து வருகிறான்!

**கதிர்வேல்:** உனக்குத் தெரியாதது இல்ல! எட்டாவதுலயே இந்தத் திருக்குறள படிச்சிருக்கே!

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்து" னு திருவள்ளுவர் சொல்றார்!

(தனக்குப் பேச ஏதோ கிடைத்து விட்டது என்பது போல் முகக் குறிப்புடன்)

**சுப்பையா:** அப்படின்னா என்னப்பா!

**கதிர்வேல்:** அப்படிக்கேளு! எட்டாவதுல படிச்ச திருக்குறளுக்குப் பதினொன்னாவது வந்து விளக்கத்த கேளு!

**சுப்பையா:** இல்லப்பா! தெரியலன்னா எப்ப தெரிஞ்சுக்கிட்டாலும் நல்லது தானே!

**கதிர்வேல்:** இதெல்லாம் நல்லாப் பேசுவியே! படின்னு இவ்வளவு நேரம் சொன்னேன்! அதுக்கு ஒரு வார்த்தை பதில் சொல்லல!

**சுப்பையா:** படிக்கிறேன்பா! அதுக்காக இந்தத் திருக்குறளுக்கு விளக்கம் சொல்ல மாட்டிங்களா?

**கதிர்வேல்:** "ஒரு பிறவில ஒருத்தர் நல்லாப் படிச்சார்னா அடுத்து வர்ற ஏழு பிறவிக்கும் அந்தப் படிப்பே போதும்! அந்தப் படிப்பே அவருக்குப் பாதுகாப்பா நின்னு அவர காப்பாத்தும்!

**சுப்பையா:** நீங்களும் சித்தப்பாவும் இந்தப் பிறவில நல்லாத் தான படிச்சீங்கப்பா?

**கதிர்வேல்:** ஆமாம்! அதனால் தான் இன்னைக்கு ஒரு நல்ல நிலைமைல இருக்கோம்!

**சுப்பையா:** அப்ப இன்னும் அடுத்து வர்ற ஆறு பிறவிக்கு நீங்க இரண்டு பேரும் படிக்கவே வேண்டாம் – அப்படித்தானப்பா சொல்றீங்க?

(சுப்பையாவின் கேள்வியால் சற்றுத் திகிலடைந்த கதிர்வேல் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்)

**கதிர்வேல்:** ஆமா!

**சுப்பையா**: அப்ப கவலை இல்லப்பா!

**கதிர்வேல்:** என்ன கவலை இல்ல!

**சுப்பையா:** நான் படிக்காம இருக்கேன் னு நீங்க கவலைப்பட வேண்டிய தேவையே இல்ல!

**கதிர்வேல்:** புரியலயே! நீ என்ன சொல்ல வரேன்னு..

**சுப்பையா** (நமுட்டுச் சிரிப்புடன்) : போன பிறவிலேயே நான் முனைவர் பட்டத்துக்குப் படிச்சிட்டேன்! அதனால் தான் இந்தப் பிறவியில் படிக்காம இருக்கேன்! இது தெரியாம நீங்க என்னைத் திட்டிட்டீங்க!

**கதிர்வேல்:** எடு விளக்குமாற! இவரு போன பிறவியில படிச்சாராம்! அதனால் இந்தப் பிறவியில படிக்க மாட்டாராம்!

**சுப்பையா:** ஆமாம்பா! நீங்க அப்படித் தானே விளக்கம் சொன்னீங்க!

(சுப்பையாவின் தமிழாசிரியரும் கதிர்வே—ன் நண்பருமாகிய சூசை அமல்ராசு நடைப்பயிற்சி முடித்து வருகிறார்)

**சூசை அமல்ராசு:** என்ன காலங்காத்தாலேயே திருக்குறள் விவாதம் தெரு வரைக்கும் கேட்குது! கதிர்வேல் வீடுன்னா சும்மாவா?

**கதிர்வேல்:** அட நீ வேறப்பா! ஒழுங்காப் படின்னு சொன்னா போன பிறவியிலயே படிச்சிட்டேன்னு வீம்பு பேசுறான் உன் மாணவன்!

**சுப்பையா:** ஒன்னுமில்ல மாமா! எழுமை ங்கிறதுக்கு நீங்க சொன்ன விளக்கத்த அப்பாக்கிட்டே சொல்—ப் பார்த்தேன்! அவ்வுளவுதான்!

**கதிர்வேல்:** "நீங்க சொன்ன விளக்கமா?" நினைச்சேன்— பையன் இவ்வளவு உறுதியாப் பேசறானே! அமுதினிதான் தூண்டி விட்டுட்டுத் தோட்டத்துப் பக்கம் போய்ட்டாளோ!னு ஒரு சந்தேகம் இருந்தது! இப்ப அது இல்ல! இதுக்குப் பின்னாடி நீதான் இருக்கேன்னு தெரிஞ்சுப் போச்சு!

**சூசை அமல்ராசு:** பையன்களுக்கு அறிவுத் தீய தூண்டி விடற வேலை தான கதிர்வேல், நம்மளோடது!

**கதிர்வேல்:** அறிவுத்தீய நீ தூண்டறது எல்லாம் சரிதான்! அந்தத் தீ என் தலைல விழுந்துடும் போல இருக்கே!

(இருவரும் சிரிக்கிறார்கள்)

**கதிர்வேல்:** சொல்லு! நீ என்ன புது விளக்கம் சொல்—க் கொடுத்துருக்கே!

**சூசை :** அது ஒன்னுமில்ல! "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு"ன்னு பதினொன்னாவதுல திருக்குறள் வருது! அதுக்கு விளக்கம் சொல்— இருந்தேன் அவ்வளவுதான்!

**கதிர்வேல்:** அப்படி என்ன சொன்னே? அதச் சொல்லு!

**சூசை:** எழுமை எழுபிறப்பு ன்னு திருவள்ளுவர் சொல்றது அடுத்தடுத்து வரும் பிறவி இல்லை னு சொன்னேன்.

**கதிர்வேல்:** பிறவி இல்லைனு சொன்னியா? என்னப்பா இது புதுசா இருக்கு! அப்ப அது என்ன?

**சூசை:** பிறவின்னு திருவள்ளுவர் சொல்றது "அடுத்தடுத்த பிறவியை இல்லை கதிர்வேல்!

**கதிர்வேல்:** இது திருவள்ளுவரோட விளக்கமா? இல்ல சூசை அமல்ராசோட விளக்கமா?

**சூசை:** (சிரித்துக் கொண்டே) நீ இப்படிக் கேட்பாய்னு நினைச்சேன்! அடுத்தடுத்த பிறவி உண்டு ன்னு திருவள்ளுவர் சொல்றவரா இருந்தா "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" னு சொல்—யிருப்பாரா?

**கதிர்வேல்:** என்னப்பா – இப்படிக் கேட்டுட்டே! ஒரே வரியில என்னை யோசிக்க வச்சிட்டயே!

**சூசை:** உன்னைச் சிந்திக்க வச்சது நான் இல்ல! திருவள்ளுவர் தான்! அவரை முழுசாப் புரியாம இருந்த நீ இப்ப கொஞ்சம் யோசிக்கிறே! அவ்வளவுதான்!

**கதிர்வேல்:** அப்படின்னா பிறவிங்கிறதுக்கு என்ன விளக்கம் தான் எடுத்துகிடறது?

**சூசை:** பிறவிங்கிறது அடுத்தடுத்த பிறவி இல்லப்பா! அது அடுத்தடுத்து வர்ற தலைமுறை!

**கதிர்வேல்:** புரியலயே!

**சூசை:** ஒரு தலைமுறைல நீ நல்லாப் படிச்சுத் தமிழாசிரியர் ஆயிட்டே! இனி உன் வீட்டுல வர்ற ஒவ்வொரு தலைமுறைக்கும் உன் படிப்பு உதவியா இருக்கும்! நீ நல்லாப் படிச்சு நல்ல நிலைமைக்கு வந்ததால தான் இன்னைக்குச் சுப்பையாவ உன்னை விட நல்லாப் படிக்க வைக்கணும் னு நினைக்கிறே! இல்லையா? இது மாதிரிதான்!

**கதிர்வேல்:** அது சரி! அப்போ – "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண் விழுமந் துடைத்தவர் நட்பு" னு சொல்றதுக்கு என்ன விளக்கம் சொல்றது?

**சூசை**: அதை நீயே சொல்லேன்!

**கதிர்வேல்:** ஒரு தலைமுறைல நமக்கு உதவுன ஒருத்தர, நமக்கு வர்ற ஒவ்வொரு தலைமுறையும் நன்றியோட நினைச்சுப் பார்க்கும் – அட! சரியாத் தான் வருது!

**சூசை:** இதைத் தான் நேற்று உன் மகனுக்கும் வகுப்பறையில சொல்—க் கொடுத்தேன்!

**கதிர்வேல்:** என் மகன் மூலமா என் அறிவுக்கண்ணைத் திறந்துட்டேயேப்பா! இனி நானும் மாணவர்களுக்கு இதையே சொல்—த்தரேன்!

**சூசை:** மொத்தத்துல உன் மகன் உண்மையிலேயே "அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையா" வாயிட்டான்!

(இருவரும் சிரிக்கிறார்கள். சுப்பையாவும் சேர்ந்து சிரிக்கத் தொடங்குகிறான்)

# திருமூலர் காட்டும்

# “குரு” – யார்?

– சீர்காழி சிவ சந்திரசேகரன்

வேதாந்தார்த்த – ப்ரவக்தாரம் தஸ்மாத் ஸம்பூஜயேத் குரும்!

வேதாந்தத்தின் அர்த்தத்தை உபதேசிக்கும் குருவைப் பூஜிக்க வேண்டும். – குருகீதை 1:42

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே...

– விநாயகர் அகவல்.
ஔவையார் அருளியது.

உலகில் பல மதங்களைச் சேர்ந்தவர்களும் குருவின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் உணர்ந்து குருத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆரியர்களின் வேத காலத்தில் குரு இருந்ததற்கான சான்றுகள் இல்லை. பின்னர் வேதாந்த காலத்தில் திராவிட ஞானிகளால் உருவாக்கப்பட்ட உபநிஷத்துகளில் ஒன்றான ‘பிருகத் ஆரண் யக உபநிஷத்’ தில் கீழ்க்கண்டவாறு ஒரு பக்தன் வேண்டுதல் செய்கிறான்.

அஸத்தோ மா ஸத் கமய
தமஸோ மா ஜ்யோதிர் கமய
மிருத்யோ மா அம்ருதம் கமய!

**பொருள்:**

உண்மை அல்லாதவற்றி–ருந்து உண்மைக்கு வழி நடத்தும்;

இருளி–ருந்து ஒளிக்கு வழி நடத்தும்;

மரணத்தி–ருந்து நீடுவாழ்விற்கு வழி நடத்தும்.

வேத காலத்தில் இருந்த ப–க் கோட்பாடு, ப்ரஜாபதி தன்னைத் தானே ப–யாகக் கொடுத்து, ப–யை நிறைவேற்றிவிட்ட காரணத்தினால், வேதாந்த காலத்தில் ப– நிறைவேற்றக் கோட்பாடாக ஆகி, ப–யின் இடத்தை ஞானம் எடுத்துக் கொண்டது.

எனவே, சீடர்களுக்கு ஞானத்தைப் போதிக்கும் குருவின் முக்கியத்துவம் எழுந்தது. அதனால் குருத்துவ முறை தொடங்கியது.

அக்காலத்தில் குருவாக இருப்பவர்கள் இல்லறத்தில் இருக்க வேண்டும் என்ற பொது நிலை இருந்தது.

“பிற்காலத்திய இந்து மதத்தில் உள்ள வைணவர்களும், சைவர்களும் குருவை மதித்தார்கள். ஆனால், குருவை தெய்வத்துடன் ஒப்பிடவில்லை. இஸ்லாமும், கிறிஸ்தவமும் கூட மனிதனைக் குரு என்று அழைப்பதை ஆதரிக்கவில்லை. பிரம்ம சமாஜமும், பிரார்த்தனா சமாஜமும், ஆரிய சமாஜமும் மனிதனை வணங்கும் முறையையும், சிலையை வணங்கும் முறையையும் வெறுத்தன... நமது நாட்களில் இருந்த அரவிந்தர், மகாத்மா காந்தி, டாக்டர் இராதாகிருஷ்ணன், கிருஷ்ண மூர்த்தி போன்றவர்கள் குரு வணக்கத்தைப் போதிக்கவில்லை”

– சாது செல்லப்பா.
“குரு” – யார்? பக்கம் 9.

‘குரு – சிஷ்யன்’ அடிப்படையில் உருவான சீக்கிய மதத்தில் கூட முதல் பத்து குருக்களுக்குப் பிறகு, தகுதியான மனித குரு கிடைக்கவில்லை என்ற காரணத்தில் சீக்கிய வேதமான ‘ஆதி கிரந்தம்’ என்பதையே குருவாக அமைத்து, இனி மனித குரு இல்லை என்று அறிவிக்கப்பட்டது.

மத நம்பிக்கையற்றவர்கள்கூட குருவின் சிறப்பையும், வழி நடத்தலையும் ஏற்றுக் கொள்கிறார்கள். இறை நம்பிக்கையாளர்களிடம் சிறிது நெருங்கிப் பழகிப் பார்த்தால், அவர்களில் பலர் இறைவனுக்கு கொடுக்கும் முக்கியத்தை விட, தங்கள் அபிமான குருவிற்கும், அவருடைய போதனை மற்றும் கட்டளைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று அறிய முடியும்.

தற்காலத்தில் குருவை நாடிச் செல்பவர்களில் பலர் ஆன்மீகப் பலன்களை அடைவதற்குப் பதிலாக, இவ்வுலகத் தேவைகள், மன அமைதி, மன அழுத்தம் நீங்கப் பெறுதல், அட்டமா சித்திகளில் சிலவற்றைப் பெற்றுக் கொண்டு, அதன் வழி மற்றவர்களை பிரமிக்கச் செய்தல் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை அடைந்து மன நிறைவும், மன மகிழ்ச்சியும் பெறுகின்றனர்.

மறுமையைப் பற்றிய சிந்தனையே இவர்களிடம் காணப்படுவதில்லை.

குரு எனப்படுபவர்களில் பலரும் ஆன்மீக நன்மைகளை வழங்குதல் என்ற பெயரில் “பேச்சில் ஆன்மீகத்தை முதன்மைப்படுத்தி, நடைமுறையில் உலகியல் இன்பங்கள் மற்றும் தேவைகளை பக்தர்களுக்கு அளிப்பதில் அதிகக் கவனம் செலுத்துகின்றனர்.”

குருவை நாடி வரும் மக்களும் அதிசயங்கள், அற்புதங்கள் நடைபெறுவதில் அதிக நாட்டம் கொள்வதினால் ‘மந்திரத்தில் மாங்காய் வரவழைத்தல்’ போன்ற ம—வான செயல்களில் ஈடுபடும் குருவை நாடி மக்கள் கூட்டம் அலை மோதுகின்றது. தன்னை நாடி வரும் பக்தர்களின் ஆர்வத்தையும், எதிர்பார்ப்புகளையும் கருத்தில் கொண்டு போ—க் குருக்கள், பலர் செயல்பட்டு, பல்லாயிரங் கோடி அளவில் பணம் சேர்ப்பதிலும், சொத்து குவிப்பதிலும், பன்னாட்டு வியாபார நிறுவனம் போன்று பல வெளிநாடுகளில் கிளைகளைத் திறந்து, அங்கு தனக்குப் பக்தர்களை உருவாக்கி சித்து வேலைகள் செய்வதிலும், பா—யல் இன்பங்களில் ஈடுபடுத—லும் வழியாக இறைவனை அடைந்து பேரின்பம் அடைய முடியும் என்று போதித்து தங்களைப் போன்று, பக்தர்களையும் ஈடுபடச் செய்கின்றனர்.

உலகிற்கு இவை வெளிப்படுங்காலத்தில் போ—க் குருக்கள் தாங்கள் அவமானம் அடைவது மட்டுமின்றி, தங்களை நாடி வந்த பக்தர்களையும் தலை குனிய வைத்து, தங்கள் வெட்கக்கேடுகளையும், அவமானங்களையும், இழப்புகளையும் வெளியில் சொல்லக் கூச்சப்பட்டு, ஊமை கனவு கண்டதைப் போன்று பக்தர்களைத் தத்தளிக்க வைக்கின்றனர்.

இத்தகைய போ—க் குருக்களின், செயல்களினால், நேர்மையான, ஆரவாரமற்ற, ஆர்ப்பாட்டமற்ற, பக்தர்களை ஆன்ம ஒளி அடைய வழி நடத்தும் குருக்கள் பலர் மக்கள் நடுவில் தலை குனிய நேரிடுகிறது..

மேலும், அந்த போ—க் குருக்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவராகத் தங்களைக் காட்டிக் கொள்கின்றனரோ, அந்த மதத்தைச் சேர்ந்த உண்மை பக்தர்களும் மக்கள் நடுவில் தலை குனிய நேரிடுகிறது.

இந்நிலையில் ‘மெய்யான குரு’ – யார்? என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது தேவையான ஒன்று அல்லவா?

எனவே, சைவ சமய தோத்திர நூல்களான பன்னிரு திருமுறையில் பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில் திருமூல நாயனார் காட்டும் ‘மெய்யான குரு’ – யார்? என்பதையும், அதற்கு விளக்கமாக சென்னை – மயிலை ஸ்ரீராம கிருஷ்ணமடம் வெளியிட்டுள்ள ஸ்ரீகுருகீதை, சைவ சமய சாத்திரங்களான சைவ சித்தாந்த நூல்கள், கிறிஸ்தவத் திருமறையான திருவிவி—யம், உலகப் பொதுமறையான திருக்குறள் ஆகியவைகளின் பகுதிகளை மேற்கோள்களாகவும் காண்போம்.

இத்தொடரைப் படிக்கும்போது விருப்பு, வெறுப்பின்றி, மதமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு, ‘மெய்யான குரு’ – யார்? என்பதை அறிந்து, அவர் பாதம் பணிந்து, ஆன்ம ஒளி பெற்று, இவ்வுலகில் வாழ்வாங்கு வாழவும் மறுமையில் நிலையான பேரின்ப வாழ்வை – நீடுவாழ்வை அடையவும் முயல்வோம்.

# புற்றுநோய்ப் படுக்கையில் சுரந்த புனிதப் பாடல்

- தெ. தேவகலா

நானிலம் மகிழ்ந்திட நிறை வாழ்வு மலர்ந்திட
நானிலத்தில் உதித்தாய்! நாதா (2)

அல்பாவும், ஒமேகாவும்
ஆதியும், அந்தமும்,
அகரமும், னகரமும்
நீயே பரம்பொருளே போற்றி! போற்றி!
நீயே பரம்பொருளே! (2)

1. எத்தனை மதங்களோ, இறைவன் ஒருவனே!
ஏது மதம் உனக்கு இறைவா
மதங்களைக் கடந்தவனே!
ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலா உனக்கு
ஆயிரம் திருநாமம் இறைவா
பாடி நாம் போற்றிடுவோம்! (2)
ஈசுவரா, இயேசுவே, இம்மானுவேலா,
ஐந்தவித்தானே, ஆதிபகவா,
அவதாரா, அருளாளா சரணடைந்தோம்! (2)
– நானிலம்

2. எந்தனை மீட்டிட உந்தனை அளித்தாயே
தியாகத் திருவுருவே அன்பே
தியாகத் திருவுருவே!
இறவா இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வனே நீ அன்பே
பிறந்திட்டாய் பாரினிலே! (2)
ஈசுவரா, இயேசுவே, இம்மானுவேலா,
ஐந்தவித்தானே, ஆதிபகவா,
அவதாரா, அருளாளா சரணடைந்தோம்! (2)
– நானிலம்

3. ஈசனே வந்து சிலுவையில் மாண்டு
எழுந்து உயிர்த்தாயே – இறைவா
நாளொரு மூன்றினிலே !
அவியாய் அவியுமாகி அருக்கமாய்ப் பெருக்கமாகிப்
பாவியர் பாவம் தீர்க்கும் அன்பே
பரமனே பிரமனானாய்! (2)
ஈசுவரா, இயேசுவே, இம்மானுவேலா,
ஐந்தவித்தானே, ஆதிபகவா,
அவதாரா, அருளாளா சரணடைந்தோம்! (2)
– நானிலம்

தொடர் – 3

# இயேசு கிறிஸ்து காட்டிய பரலோக ராஜ்யம் [அ] ஆன்மீகப் பொதுவுடைமை

– கி. அன்பரசி

இதற்கு முன்னுள்ள தொடர்களில் சடங்காச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் இயேசு கிறிஸ்து கண்டிப்பதோடு மக்களுக்குச் செய்யும் பணியே இறைவனுக்குச் செய்யும் பணி என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டியதைப் பார்த்தோம்.

ஆன்மீகப் பொதுவுடைமையைத் திராட்சைத் தோட்ட உவமை மூலம் இயேசு கிறிஸ்து பின்வருமாறு விளக்குகிறார்.

*“பரலோகராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது; அவன் தன் திராட்சைத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான்.”*

*வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூ– பேசி, அவர்களைத் தன் திராட்சைத்தோட்டத்துக்கு அனுப்பினான். மூன்றாம் மணி வேளையிலும் அவன் புறப்பட்டுப்போய், கடைத்தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு,*

*‘நீங்களும் திராட்சைத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூ– கொடுப்பேன் என்றான்; அவர்களும் போனார்கள்.’ மறுபடியும், ஆறாம் ஒன்பதாம் மணிவேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான். பதினோராம் மணிவேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி: நீங்களும் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூ– பெற்றுக் கொள்வீர்கள் என்றான்.*

*சாயங்காலத்தில் திராட்சைத்தோட்டத்துக்கு எஜமான் தன் காரியகாரனை நோக்கி: நீ வேலையாட்களை அழைத்து, பிந்தி வந்தவர்கள் தொடங்கி முந்தி வந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூ– கொடு என்றான்.*

*அப்பொழுது பதினோராம் மணிவேளையில் வேலையமர்த்தப்பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள்.*

*முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து, தங்களுக்கு அதிக கூ– கிடைக்கும் என்று எண்ணினார்கள், அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள்.*

*வாங்கிக் கொண்டு, வீட்டெஜமானை நோக்கி, ‘பிந்தி வந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேர மாத்திரம் வேலை செய்தார்கள்; பக–ன் கஷ்டத்தையும் வெயி–ன் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே’ என்று முறுமுறுத்தார்கள்.*

*அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக: ‘சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை; நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா. உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ, உனக்குக் கொடுத்தது போல பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம்.’*

*என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்க, நீ வன்கண்ணனாயிருக்கலாமா என்றான்.”*

*(மத்தேயு 20– 1:15)*

இது என்ன நியாயம்?

காலையி–ருந்து மாலை வரை வெட்டா வெயி–ல் உழைத்தவனுக்கும் ஒரு பணம்.

மாலையில் பிந்தி வந்தவர்களுக்கும் அதே ஒரு பணமா?

எந்த விதத்தில் இது நியாயம்? என எண்ணலாம்.

அவர் மூன்றாம் மணி நேரம் வந்தவர்களுக்கும், ஆறாம் மணி நேரம் வந்தவர்களுக்கும், ஒன்பதாம் மணி நேரம் வந்தவர்களுக்கும், பதினோராம் மணி நேரம் வந்தவர்களுக்கும் ஒரே பணம் தான் கொடுத்தார். எனவே, இந்தப் பகுதியைப்

படிக்கும்போது முதலாளி நியாயமற்றவர் போல் காட்சியளிக்கலாம்.

முத—ல் வந்தவர்களுக்குப் பேசிய படியே ஒரு பணம் முத—ல் கொடுத்திருந்தால் அதை வாங்கிக் கொண்டு ஒரு வேளை அமைதியாகச் சென்றிருப்பர்.

பதினோராம் மணி வேளையில் வேலையமர்த்தப்பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒரு பணம் வாங்கினர். எனவே, முந்தி அமர்த்தப்பட்டவர்கள் தங்களுக்கு அதிக பணம் கொடுப்பார்கள் என்று நினைத்து உவகையுற்றனர். ஆனால், அவர்கள் நினைத்தது போல் நடக்கவில்லை. மாறாக முன்பு வந்தவர்களுக்கும் அதே ஒரு பணத்தையே கொடுத்தார். இதைக் கண்டு முன்பு வந்தவர்கள் கொதித்துப் போய் முறுமுறுத்தார்கள்.

வேலைக்குக் கடைசியில் வந்தவர்களுக்கு ஒரு பணத்தை முத—ல் கொடுக்கக் காரணம் என்ன? இதைத்தான் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

காலையி—ருந்தே வேலை செய்தவர்கள் ஒரு புறம் இருக்க, பிந்தி வந்தவர்கள் ஏன் அவ்வாறு பிந்தி வந்தார்கள் என்பதைப் பின்வரும் பகுதியில் ஆழ்ந்து பார்ப்போமானால் ஓர் உண்மை புரியும்.

> *பதினோராம் மணிவேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்:* ***ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள்.*** *அவன் அவர்களை நோக்கி: நீங்களும் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூ— பெற்றுக் கொள்வீர்கள் என்றான்.*

வேலை இருந்தும் வேலையை ஒழுங்காகச் செய்யாதவர்களாக அவர்கள் நிற்கவில்லை. ஒருவரும் வேலை தராததால் அவர்கள் வேலையில்லாமல் நின்று கொண்டிருந்தார்கள். வேலையில்லாக் கொடிய நிலையை இங்கு உணர முடிகின்றது.

> *‘‘சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை; நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்க வில்லையா? என்று அதில் இருந்த ஒருவனுக்கு அவர் உரைத்தார். அது மட்டுமல்லாமல் உன்னுடையதை வாங்கிக் கொண்டு போ இது என்னுடைய விருப்பம் என்றார்.*

வேலை கிடைத்தவர்கள் ‘தாம் உண்டு; தம் சம்பளம் உண்டு; தம் மனைவி, பிள்ளைகளுண்டு’ என்று சுயநலமாய்ச் சிந்தித்துச் செயல்படாமல், வேலையின்றி வாடுவோருக்காகவும், சமுதாயத்தில் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டிருப்போருக்காகவும் நாமும் ஏதாவது நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டாமா? இந்தப் பொதுவுடைமைச் சிந்தனையை ஊட்ட வேண்டும் என்பதற்காகத்தான், வேலைக்குக் கடைசியில் வந்தவர்களுக்கு முத—ல் ஒரு பணத்தைக் கொடுத்துவிட்டு, பின்னர் முத—ல் வந்தவர்களுக்கும் பகல் முழுவதும் வேலை செய்தவர்களுக்கும் தான் பேசிய அதே ஒரு பணத்தையே கொடுத்துள்ளார்.

எனவே, வாழ்க்கையில் நமக்கு நல்லதொரு வாய்ப்பு கிடைக்கும்போது, அதனால் கிடைக்கும் பலனை நாம் மட்டும் அனுபவிக்க எண்ணாமல் இந்த வாய்ப்பு கிடைக்காதவர்களோடு பகிர்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற பொதுவுடைமைச் சிந்தனையையே இதில் காட்டுகின்றார்.

இதையே, திருவள்ளுவர் தன்னுடைய திருக்குறளில்,

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.**

– கொல்லாமை – 33ஆம் அதிகாரம்.

இதில் வள்ளுவர் சொல்ல வருவது என்னவெனில்,

தன்னுடைய உணவைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்து மற்ற உயிர்களைப் பாதுகாத்தலே தலை சிறந்த அறம் ஆகும். இதுவே நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையான அறம் ஆகும்.

இவ்வாறு, சமுதாயத்தைப் பற்றி அக்கறையின்றி வாழ்வதை விட்டு, பொதுநலச் சிந்தையோடு வாழ வேண்டியதன் இன்றியமையாமையை மேற்கூறப்பட்ட திராட்சைத் தோட்ட உவமை மூலம் இயேசு கிறிஸ்து அழகாகக் காட்டியுள்ளார்.

இதுவே

சரியான ஆன்மீகம்.

இதுவே

சரியான ஆன்மீகப் பொதுவுடைமைக்கு வழி.

## சந்தாதாரர் கவனத்திற்கு...

**தமிழர் சமயம் இதழுக்கான சந்தா செலுத்தாதவர்கள் ஆண்டுச் சந்தா ரூ.100/- செலுத்தி இதழைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

# தமிழ் நாட்டைத் தமிழரே ஆளவேண்டி சென்னை நினைவரங்கம் அருகே நடைபெற்ற பிரார்த்தனைப் போராட்டம்

இந்திய அரசு 1956இல் பிறப்பித்த மொழிவழி மாநிலப் பிரிப்புக்கான அரசாணையின்படி, இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் ஏற்படுத்தப்பட்டன அப்போது மதராஸ் மாகாணமாக விளங்கிய தென்னிந்தியப் பகுதி ஆந்திரம், கன்னடம், கேரளம், சென்னை மாகாணம் என்னும் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களாக உருவாக்கப்பட்டன. தமிழ் பேசும் மக்கள் நிரம்பிய பல பகுதிகள் ஆந்திரம், கன்னடம், கேரளம் என்னும் மூன்று மாநிலங்களில் அடக்கப்பட்டன. பின்பு ஆந்திர மாநிலத்தில் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட தெலுங்கினத்தவரும், கன்னட மாநிலத்தில் கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்ட கன்னட இனத்தவரும், கேரள மாநிலத்தில் மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்ட மலையாளிகளும் ஆட்சி நடத்தத் தொடங்கி இன்றுவரை அவ்வினத்தினரே ஆள்கின்றனர் என்பது வெள்ளிடை மலையாக விளங்குகின்றது.

ஆனால், தமிழகத்தில் காமராஜர், பக்தவத்சலம் ஆகியோருக்குப் பின்வந்த எந்த முதல்வரும் தமிழினத்தைச் சார்ந்தவர்களல்லர். சில மாதங்கள் முதல்வராக இருந்த ஓ. பன்னீர் செல்வத்தைத் தவிர முதல்வர்கள் சி. என். அண்ணாதுரை, மு. கருணாநிதி, எம்.ஜி. இராமசந்திரன், ஜானகி, ஜெயலலிதா போன்றோர் தமிழ் மொழி பேசும் பிற இனத்தினர்.

தமிழினத்தைச் சாராதவர்கள் தமிழினத்தவருக்கு ஓர் இடர்வரும்போது அதைக் கண்டு விலகிக் கொள்கின்றனர். குறிப்பாக ஈழத்தில் தமிழினத்தை அழித்தொழித்தபோது அந்த அரசில் பங்குவகித்த தமிழகத்தில் ஆளுங்கட்சியாகவுமிருந்த தி.மு.க. ஆக்கப்பூர்வமாக எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல், தமிழினத்தினரை ஏமாற்றுவதற்காகப் பல்வேறு போராட்ட நாடகங்களை அரங்கேற்றியது. இதன் உச்சகட்டமாகத் திரு. மு. கருணாநிதி அவர்கள் அனைத்துக் கட்சி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா என்னும் தீர்மானத்தைத் தன்னிச்சையாகச் செயல்படுத்தாமல் தடுத்துவிட்டார். இச்செயலால் அவர் தெலுங்கர் என்பதை மீண்டும் நிரூபித்துவிட்டார். அதோடல்லாமல், ஈகியர் முத்துக்குமார் ஈழத்தில் இந்திய அரசின் பேராதரவுடன் சிங்களர் நடத்தும் தமிழின அழிப்புப் போரை நிறுத்தக் கோரி மத்திய அரசு அலுவலகமான சென்னை சாஸ்திரிபவன் வளாகத்தில் தன்மேல் தீ வைத்துக் கொண்டு தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்டதன் விளைவாகத் தமிழகத்தில் பேரெழுச்சி ஏற்பட்டது.

குறிப்பாக மாணவர்களிடையே ஏற்பட்ட இந்த எழுச்சி கட்டுக்கடங்காமல் போனது. இவ்வெழுச்சியை அடக்குவதற்கு அப்போது தமிழக முதல்வராக இருந்த திரு. மு. கருணாநிதி அவர்கள் கால வரைரையற்ற விடுப்பை அறிவித்தார். விடுதியில் கூட எந்த மாணவரும் தங்கக் கூடாது என்றும் கட்டளையிட்டார். அச்சமயம் மாற்றுத்திறன் வாய்ந்த மாணவ, மாணவிகள் பட்ட பாடுகள் சொல்லித் தீராது. ஒரு வேளை அப்போது தமிழகத்தில் தமிழினத்தைச் சார்ந்த ஒரு முதல்வர் இருந்திருந்தால் ஈழத்தில் பல இலட்சம் தமிழனச் சொந்தங்கள் அழிக்கப்படாமல் காக்கப்பட்டிருக்கலாம். திரு. மு. கருணாநிதி அவர்கள் தெலுங்கராக இருந்த ஒரே காரணத்தினால் ஈழத்தில் பல லட்சம் தமிழினச் சொந்தங்கள் அழிக்கப்பட்டனர். இந்த இன அழிப்புப் போரில் தெலுங்கர் திரு. மு. கருணாநிதி அவர்களுக்குப் பெரும் பங்குண்டு என்பது வரலாற்றில் எவராலும் மறைக்க முடியாத உண்மையாகும். இன்னும் ஏராளம் சொல்லிக்கொண்டே போகலாம். சொல்லி முடியாதவைகள் மிகப்பலப்பல.

எனவே, இந்நிலையை உணர்ந்தவராகத் தமிழ் நாட்டில் தமிழினத்தைச் சார்ந்த தமிழரே ஆட்சிக்கு வரவேண்டும் என்னும் நோக்கில் முனைவர் மு. தெய்வநாயகம் அவர்கள் இதற்காகப் பிரார்த்தனைப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டார். அவருடன் ஒத்த சிந்தனை கொண்ட பலரும் அவருடன் இணைந்து இப்போராட்டத்தில் ஈடுபடலாயினர். இப்போராட்டம் தமிழக முதல்வராகக் கன்னட பிராமணப் பெண்மணி செல்வி ஜெயலலிதா பதவியேற்ற தேதியில் நீதிமன்ற அனுமதியுடன் தொடர்ந்து ஒவ்வொரு 16ஆம் தேதியும் பகல் 12.00 மணி முதல் 1.30 மணி வரை சென்னை, சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே நடைபெற்று வந்தது. இம்மாதம் 'மெட்ரோ ரெயில் திட்டப் பணி'களுக்காக அவ்விடத்தை ஒதுக்கிவிட்டதால் சென்னை நினைவரங்கம் அருகே நடைபெற்றது. பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகம் அவர்களும், முனைவர் தெ. தேவகலா அவர்களும் மலேசியாவில் நடைபெறும் உலகத் தமிழ் கிறிஸ்தவ மாநாட்டில் கட்டுரை வழங்குவதற்காகச் சென்றிருப்பதால் திருத்தொண்டர் லூர்துசாமி அவர்களின் தலைமையில் இப்போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்தில் ஜோதிடர் திரு. தாமஸ் கதிரவன், திரு. வில்லியம்ஸ், திருத்தொண்டர் அமலதாஸ், திருத்தொண்டர் வேதமுத்து, திரு. விஜயகாந்த் ஆகியோர் தம் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டு பிரார்த்தனையை ஏறெடுத்தார்கள். திரு. இருதயராஜ் அவர்கள் போராட்ட மையக் கருத்தமைந்த அருட்தந்தை அமல்ராசு மற்றும் முனைவர் தெ. தேவகலா அவர்கள் இயற்றிய "தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டும், தமிழ் நாட்டில் பிறர் வாழத் தடையேயில்லை" என்னும் பாடலைப் பாடினார். இறுதியாகத் திரு. அருள்மாறன் நன்றியை நவின்றார். இறைவனிடத்தில் பிரார்த்தனையை ஏறெடுத்திருக்கிறோம். தமிழ் நாட்டில் தமிழினத்தவர் முதல்வராவதை நம் கண் விரைவில் காணும்.

நம்பிக்கையுடன்,
வெற்றிவேந்தன்.

# நமது வெளியீடுகள்

| நூல்கள் | | விலை |
|---|---|---|
| 1. உலக மொழிகளில் சிறந்தது தமிழ். எவ்வாறு? | – | 5.00 |
| 2. தமிழர் சமயத்தை விடுவிக்கப் போவது யார்? | – | 20.00 |
| 3. இந்துத்துவாவின் பிடியி–ருந்து இந்து மதத்தை விடுவிப்பது எவ்வாறு? | – | 10.00 |
| 4. இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே... எவ்வாறு? | – | 150.00 |
| 5. திருநீறா? சிலுவையா? | – | 10.00 |
| 6. கடவுள் இருக்கின்றாரா? | – | 15.00 |
| 7. திராவிடர் சிந்தனையில் பிள்ளையார் | – | 10.00 |
| 8. கபாலீஸ்வரர் கோவில் கருவறையி–ருந்து பிராமணர்களே வெளியேறுங்கள் | – | 20.00 |
| 9. அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனத்தைப் பாதுகாப்பது எவ்வாறு? | – | 20.00 |
| 10. சங்கரமடத்திற்கு ஒரு சவால் | – | 15.00 |
| 11. சங்கரடத்திற்கு 108 கேள்விகள் | – | 20.00 |
| 12. தன்மானமுள்ள இந்தியர்களாகிய நாம் இப்பொழுது செய்ய வேண்டியது என்ன? | – | 5.00 |
| 13. புனித தோமா விதைத்த விதை முளைக்கவில்லையா? | – | 10.00 |
| 14. தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு எச்சரிக்கை | – | 50.00 |
| 15. உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் சமயமும் தமிழர் ஆன்மவியலும் | – | 50.00 |
| 16, Creeds and Doctrine of Trinity in St. Thomas Dravidian Christianity | - | 50.00 |
| 17. Who Are the Indian Dalits? | - | 10.00 |
| 18. Hindu Religion is the offshoot of St. Thomas Dravidian Christianity | – | 25.00 |
| 19. புனித தோமாவழி தமிழ்க் கிறிஸ்தவத்தின் புனித நினைவிடங்கள் காப்பாற்றப்பட்ட வரலாறு | – | 10.00 |
| 20. சிவஞானபோதம் | – | 20.00 |
| 21. தமிழர் சமயம் மாத இதழின் ஆண்டுச் சந்தா | – | 100.00 |

DVDs

| | | | |
|---|---|---|---|
| 1. தருமை ஆதீன விவாதமும் நமது வெற்றியும் | – 1 DVD | – | 100/– |
| 2. தமிழர் சமய உலக முதல் மாநாடு | – 3 DVDs | – | 300/– |

உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்கம்
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023.
☎ +9144-26743842; 9840003842 Email: tamilarsamayam2010@gmail.com

**Postal Date : 1st and 2nd of every month    Date of posting : 2nd of August 2012**
Egmore RMS Patrika Channel, Regd.with Registrar, News Paper of India
Registration Number of the Newspaper TNTAM / 2009 / 30866 Postal Registered No. TN / CCN / 513 / 10 - 12
WPP licence No. TN/PMG (CCR)/WPP - 188/10-12.
T.C.No.T.N TAM 18701    THAMIZHAR SAMAYAM    R.Dis No : 220 / 09

தெலுங்கு நாட்டைத் தெலுங்கர் ஆளுகின்றார்கள்; கன்னட நாட்டைக் கன்னடர் ஆளுகின்றார்கள்; மலையாள நாட்டை மலையாளிகள் ஆளுகின்றார்கள்.

# "தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்"

## 18ஆவது
## பிரார்த்தனை - போராட்டம்

நாள்: **16.08.2012, வியாழக்கிழமை, காலை 11.30 முதல் 1.30 மணி வரை**

இடம்: **மாலை நேர அங்காடி சாலையிலுள்ள மெமோரியல் ஹால் எதிரில், சென்னை**

*அன்புடன் அழைக்கின்றோம்...*



**வாசகர்களின் அன்பான கவனத்திற்கு....**
**மாநாடு தொடர்பான செய்திகளைப் பின்வரும் நமது இணையதளத்தில் காணலாம்.**
**www.soulologyofthetamils.com**

**தமிழர் சமயம் இதழுக்கான சந்தா செலுத்தாதவர்கள் ஆண்டுச் சந்தா ரூ.100/- செலுத்தி இதழைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

| | | |
|---|---|---|
| **Editor, Publisher, Printer** | : | Dr.M.Deivanayagam Ph.D. |
| **Sub Editors** | : | Dr. D. Devakala, Ph.D. |
| | | Mr. Seerkazhi Siva. Chandrasekaran |
| **Printer** | : | D. Devavaram, Meipporul Printers, 278, Konnur High Road, Ayanpuram, Chennai - 600 023. |
| **Phone** | : | 26741526 |
| **Email** | : | **tamilarsamayam2010@gmail.com** |
| **Website** | : | **www.soulologyofthetamils.com** |
| | | **26743842** |

பெறுநர்

Owned and published by Dr. M.Deivanayagam, No.278, Konnur High Road, Ayanpuram, Chennai-600 023 and printed by D.Devavaram at Meipporul Achakam, No. 278, Konnur High Road.Ayanpuram, Chennai-600 023. **Editor**: Dr. M. Deivanayagam